தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்,

நீலகிரி மாவட்டம்

## நிபந்தனைகள்

1. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் உரிமம் வழங்கும் தேதியிலிருந்து ஓராண்டு காலம் வரை மட்டுமே காலி புட்டிகளை சம்மந்தப்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலிருந்து எடுத்துச் செல்ல முடியும்.
2. நிர்வாக காரணங்களை முன்னிட்டு நிர்வாகத்தால் ஒப்பந்த காலத்தை குறைக்கவோ, நீட்டிக்கவோ அல்லது இரத்து செய்யவோ மாவட்ட மேலாளருக்கு அதிகாரம் உண்டு.
3. பிணை வைப்புத் தொகை ரூ.5000/– வரைவோலையாக (Demand Draft) செலுத்தப்பட வேண்டும்.
4. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை அவர் செலுத்த வேண்டிய காப்புத் தொகை கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்படாத நபர்களின் பிணை வைப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின் திருப்பித் தரப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்ப கட்டணமாக ரூ.120/–ஐ வரைவோலையாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

6. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

7. தாமதமாக பெறப்படும், வரைவோலையின்றி பெறப்படும் மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாமல் பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

8. ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனைகளில் ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்பந்ததாரரின் பெயர் எழுதி கையொப்பம் இட வேண்டும். கையொப்பம் இல்லாமல் பெறப்படும் ஒப்பந்தபுள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படுவதில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழக நீலகிரி மாவட்ட மேலாளரின் முடிவே இறுதியாகும். எந்த காரணமும் தெரிவிக்காமல் விண்ணப்பங்களை நிராகரிக்க முழு அதிகாரம் டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு உண்டு.

10. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்ட மூன்று தினங்களுக்குள் காப்புத் தொகை ரூ.20000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நீலகிரி என்ற பெயரில் வங்கி வரைவோலையாக எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

11. ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நபர் ஏற்கெனவே டாஸ்மாக் நிறுவனத்திடமிருந்து மதுபான காலி புட்டிகள், காலி அட்டைப் பெட்டிகள் மற்றும் காகிதக் கழிவுகள் சேகரிக்கும் உரிமம் பெற்று அதில் ஏதேனும் தொகை செலுத்தாமல் இருந்திருந்தாலோ அல்லது தவறான செயல்களில் ஈடுபட்டது தெரியவந்தாலோ அல்லது அவருடைய கடந்த கால செயல்பாடுகளில் குறைகள் இருந்தாலோ அந்த நபரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

12. சேகரிக்கப்படும் காலி புட்டிகளுக்கு அதிகபட்ச தொகை குறிப்பிடுபவருக்கு மாவட்ட மேலாளரால், காலி பாட்டில் சேகரித்துக்கொள்ளும் உரிமம் அளிக்கப்படும்.

13. நிர்வாக காரணங்களை ஒட்டி மதுபான சில்லறை விற்பனைக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியிருந்தால் மாற்றப்பட்ட இடத்திலிருந்து காலி புட்டிகளை சேகரிக்க வேண்டும்.

14. அரசு கொள்கையில் மாற்றம் ஏற்படின் அதன் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் தானாகவே முடிவுறும். அவ்வாறு முடிப்பதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு காரணம் தெரிவிக்கப்படமாட்டாது. முன் அறிவிப்பும் கொடுக்க வேண்டியதில்லை. அரசு கொள்கையால் தமிழ்நாடு மாநில வாணிப கழக மதுக்கடை மூடப்பட்டால், அதற்கு ஒப்பந்ததாரர் எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

15. டாஸ்மாக் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் மதுபான புட்டிகளின் அளவு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைப் பொறுத்தவரை 180 மி.லி. புட்டி, 375 மி.லி. புட்டி, 750 மி.லி. புட்டி, 1000 மி.லி. புட்டி, பீரைப் பொறுத்தவரை 325 மி.லி. புட்டி, 650 மி.லி. புட்டி மற்றும் டின் பீரைப் பொறுத்தவரை 500 மி.லி. டின், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களைப் பொறுத்த வரை 700 மி.லி. புட்டி, 330 மி.லி. புட்டி, 440 மி.லி. புட்டி, 490 மி.லி. புட்டி, ஆகியவை அடங்கும். ஒப்பந்ததாரர் இதற்கான அதிகபட்ச விலையை இதனோடு இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிட வேண்டும்.

16. ஒப்பந்ததாரராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாத ஒப்பந்ததாரர் செலுத்திய காப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

17. காப்புத் தொகை மற்றும் பிணை வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்படமாட்டாது.

18. நிர்வாகக் காரணம் மற்றும் பொது நலன் கருதி டாஸ்மாக் நிர்வாகம் எடுக்கும் எந்த ஒரு முடிவுக்கும் ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

19. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் கோரியுள்ள விலைப்புள்ளியின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட மதுபானக் கடைகளில் அவ்வப்போது எடுக்கப்படும் காலி புட்டிகளுக்குரிய மொத்த தொகையினை அந்தந்த கடை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்து அதற்கான ரசீதினைப் பெற்று மேற்படி காலி புட்டிகளை சம்மந்தப்பட்ட கடையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

20. ஒப்பந்ததாரர் கோரும் தொகை ஒப்பந்த காலம் முழுமைக்கும் ஒரே தொகையாக இருக்க வேண்டும். விற்பனை மற்றும் வேறு எந்த காரணத்தைக் கொண்டும் மாறாது.

21. ஒப்பந்தப் புள்ளி கொடுத்தப்பின் அதை மாற்றினாலோ அல்லது திரும்பப் பெற்றாலோ, பிணை வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

22. டாஸ்மாக் கடைகளின் வேலை நேரத்தின்போது மட்டுமே ஒப்பந்ததாரருக்கு / அவரது பணியாளருக்கு காலி புட்டிகள் சேகரிக்க அனுமதியளிக்கப்படும்.

23. அரசு அல்லது டாஸ்மாக் நிறுவனம் அவ்வப்போது விதிக்கும் இதர கட்டுப்பாடுகள், வழிகாட்டுதல்கள், விதிகள் போன்றவற்றிற்கு ஒப்பந்ததாரர் முழுமையாக கட்டுப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

24. அரசின் பிற துறைகள் இது தொடர்பாக ஏற்கனவே விதித்துள்ள (அல்லது) விதிக்கும் அனைத்து சட்ட திட்டங்களும் ஒப்பந்ததாரரை கட்டுப்படுத்தும். ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலோ, முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டாலோ உரிய விசாரணைக்கு பின்னர் உரிமம் ரத்து செய்யப்படுவது மட்டுமின்றி காப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

25. காலி புட்டிகளின் விலை நீங்கலாக அரசுக்கு செலுத்த வேண்டிய நடப்பில் உள்ள விற்பனை வரி, கூடுதல் வரி மற்றும் விதிகளின்படி செலுத்த வேண்டிய GST ஆகிய அனைத்து வரிகளும் ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட வேண்டும்.

26. மதுபான காலி புட்டிகளை எடுத்துச்செல்வதற்கான போக்குவரத்து, ஏற்றி இறக்குவதற்கு தொழிலாளர்களை நியமித்தல், அவர்களுக்கான ஊதியம் வழங்குதல் மற்றும் மேற்படி போக்குவரத்திற்கான காப்பீடு செய்தல், போக்குவரத்துச் செலவு ஆகியவை ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

27. இரண்டு வேலை நாட்களுக்கொருமுறை மதுபான காலி புட்டிகளை சம்மந்தப்பட்ட கடைகளிலிருந்து எடுத்துச்செல்ல வேண்டும். இதில் எவ்வித தொய்வின்றி செயல்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

28. இந்த ஒப்பந்தத்தின்படி மதுபானக் கடையிலிருந்து காலி புட்டிகளை எடுத்துச் செல்வைதைத் தவிர வேறு எந்த பொருட்களையும் எடுத்துச்செல்லக்கூடாது.

29. உள் ஒப்பந்ததாரர்களை அனுமதிக்க முடியாது.

30. டாஸ்மாக் நிறுவனத்திற்கு நிலுவைத்தொகை ஏதேனும் செலுத்த வேண்டியிருப்பின் அவற்றை வசூல் செய்ய வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

31. தங்களால் அடையாள அட்டை அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட நபர்கள் மூலம் தான் மதுபானக் கடைகளில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மதுபான காலி புட்டிகளை சேகரிக்க வேண்டும். அப்படி அடையாள அட்டை அல்லது அதிகார கடிதம் பெறப்படாத நபர்கள் மூலம் காலி புட்டிகளை சேகரிக்கக்கூடாது.

32. ஒப்பந்தம் நிறைவேற்றிய பின் மதுபான காலி புட்டிகளை அகற்றுவதை ஒப்பந்ததாரர் தன்னிச்சையாக நிறுத்தும் பட்சத்தில் அதனால் கழகத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பு தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் அனைவரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் விதி தொகுப்பான “மோசடி நடவடிக்கைகளை தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல் விதி தொகுப்பு

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

ஒப்பந்ததாரர் பெயர் :

2014”–ற்கு (The Code of Prevention and Detection of Fraudulent Acts in Tamil Nadu State Marketing Corporation Limited - 2014) கட்டுப்பட்டவர்கள் ஆவர்.

மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் படித்துப் பார்த்தேன் / படிக்கக் கேட்டேன். இவைகளை ஒத்துக்கொள்கிறேன்.

ஒப்பந்ததாரர் கையொப்பம் :

இடம்: ஒப்பந்ததாரர் பெயர் :

நாள்: ஒப்பந்ததாரர் முகவரி :